அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்துள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அந்த ஆலையை நடப்பு ஆண்டில் துவக்குவதற்கு மாநில அரசு முயற்சி செய்யுமா? மேலும் மாநில அரசு மத்திய அரசுக்கு புதிய ஆலைகளைத் துவக்குவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா? அதனுடைய விவரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிக்கு வடபாதிமங்கலத்தினுடைய ஆரூரான் சர்க்கரை ஆலை நம்பர் 1 பகுதியை மாற்றயிருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் புதிய ஆலை நிறுவுவதற்கு சாத்திய கூறுகள் இல்லை. நம்முடைய தமிழக அரசு 5 இடங்களிலே சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. (1) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், காஞ்சிபுரம். (2) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூர். (3) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம். (4) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை. (5) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஆகிய இடங்களில் தனியாருக்கு ஆலை நிறுவுவதற்கு பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு நாங்கள் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசின் அனுமதியை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நன்னிலம் தொகுதியைப் பற்றியது. நன்னிலத்திற்கும் போளூருக்கும் வெகு தூரம்; உட்காருங்கள்.

வினா எண். 92, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

92 –

சத்துணவு மையங்கள் மூலம் பப்பாளி மற்றும் முருங்கை மரம் வழங்குதல்.

* *20031*–**டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 மார்ச் 25]

(அ) சத்துணவு மையங்களில் உணவு உட்கொள்ளும் 3-ம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு பப்பாளி மரம், ஒரு முருங்கை மரம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பப்பாளியில் வைட்டமின் 'ஏ' வும், முருங்கையிலே 'பி' காம்ப்ளக்ஸ்-ம் இருக்கிறது. உலக வங்கித் திட்டத்துடன் 64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பார்வையின்மை கட்டுப்பாடு திட்டத்தை செயல்படுத்தியிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாணவ, மாணவியர் சமுதாயத்திற்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இந்தத் திட்டத்தை செயற்படுத்த அரசு முன்வருமா? இதனால் வரும் ஆண்டுகளில் சிக்கன நடவடிக்கையாக பல கோடி ரூபாய் மிஞ்சும் என்பதையும் அரசு அறியுமா? ஆகவே இதை மறுபரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் 3-வது வகுப்பு மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ஒரு பப்பாளி மரம், முருங்கை மரம் அவர்களுக்கே வழங்கும் திட்டத்தை செயற்படுத்த அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு அரசு முன்வராது. ஆனால் எல்லா சத்துணவுக் கூடங்களிலும் இடம் இருக்கின்ற சத்துணவுக் கூடங்கள் அனைத்திலும் தோட்டக் கலைக்காக ரூபாய் 50 சிடா என்ற திட்டத்தின் மூலமாக உலக வங்கி வழங்கி வருகிறது. அதன் மூலமாகத் தான் எல்லாயிடங்களிலும் பயிரிடப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இடம் இருக்கின்ற அனைத்து இடங்களிலும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இந்த மரங்களை பயிர் செய்யவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்து உற்பத்திக்காக 6 ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ஒரு தென்னை மரம் என்று வழங்கிய

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஒவ்வொரு மாணவ, மாணவியர்க்கும் ஒரு முருங்கை மரம், ஒரு பப்பாளி மரம் என்று கொடுப்பதன் மூலம் அந்தக் குழந்தைகள் மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தினரே பயன்பெறுவார்கள் என்பதால் இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எப்படி குழந்தைகளுக்கு தென்னை மரங்களை விவசாயத்துறை வழங்கியிருக்கிறதோ அதைப் போல பப்பாளி மரத்தையும், முருங்கை மரத்தையும் வழங்குவது பற்றி அவர்கள் ஆலோசிப்பார்கள், அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைப் போடலாம்.

முற்பகல் *10-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறி பயிரிட போதுமான இடவசதி உள்ள சத்துணவுக் கூடங்களில் உள்ள குழந்தைகள் குறிப்பிட்ட காய்கறிச் செடிகளைப் பராமரிக்கச் செய்து அதிலேயிருந்து கிடைக்கும் காய்கறிகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சத்துணவுத் திட்டத்தின் கீழ் அந்தந்த சத்துணவுக் கூடங்களில் பயிரிடப்படுகின்ற காய்கறிகளை அந்தந்த சத்துணவுக் கூடங்களில் இருக்கிற குழந்தைகள் பராமரித்து நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள். இபபோது அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் இருக்கின்ற சத்துணவுக் கூடங்கள் அனைத்திலும் அந்தத் திட்டத்தைப் பராமரித்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; அது நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே" என்று கவிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, இந்தச் சத்துணவுக் கூடங்களிலே சாப்பிடுகின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் அன்னையாக விளங்குகின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், சத்துணவுக் கூடங்களில் இருக்கின்ற குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் கண்பார்வை நன்றாகத் தெரிவதற்காக இப்பொழுதே கீரை வகைகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 25]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக ஒரு கீரையைச் சேர்த்துதான் உணவு வழங்கவேண்டுமென்கிற உத்தரவு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 93. திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

93 –

மகாதேவமலை சிவன் கோயிலுக்குப் பாதை அமைத்தல்.

* *9423*–**திருமதி கே.எம். கலைச்செல்வி:**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

காட்பாடி தொகுதி, கே.வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் "மகாதேவமலை" சிவன் கோயிலுக்குப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கே.வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியின் மகாதேவ மலை சிவன் கோயிலுக்குச் செல்லும் பாதையின் பெரும்பகுதி 'தீர்வை ஏற்படாத' தரிசு நிலத்தின் வழியாகச் செல்கிறது. பாதையின் சிறிய பகுதி மட்டும் வேலூர் கோட்டத்தைச் சார்ந்த கல்லப்பாடி காப்புக் காட்டின் வழியே செல்கிறது. மேற்கண்ட கோவிலுக்கு தரிசு நிலத்தின் வழியாகச் செல்லவும் வசதி உள்ளது. அதற்கென ஒரு சிறிய வளைவுப்பாதை மட்டும் அமைந்தால் போதுமானது. தரிசு நிலத்தின் வழியே சாலை அமைத்துக் கொள்ள வசதியுள்ள காரணத்தால் காப்புக்காட்டின் நடுவே பாதை அமைக்க அவசியமில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் இதய தெய்வம், தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள், பாரி, காரி, ஓரி, ஆய், அதிகன், நள்ளி, பேகன் என்ற கடையேழு வள்ளல்களை மிஞ்சி இன்று கொடைத்தன்மையால் இருள்சூழ்ந்த தமிழகத்தில் உள்ள ஏழையெளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிவரும் புரட்சித் தலைவியின் ஆட்சியில்,